
**SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM**



ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
( வழுத்தூராண்டவன் )

श्रीमते श्रीवेदान्त रामानुज महादेशिकाय नमः

गोपाल देशिक पदाब्ज मधु व्रतस्य
प्रज्ञाविरक्ति करुणा मुख सद्गुणाब्धेः ।
वेदान्त लक्ष्मणमुनेः श्रितभागधेयं
पादारविन्दयुगळं शरणं प्रपद्ये ॥

# ஆச்ரம வரலாறு
# ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
# ஸ்ரீமத் வழுத்தூராண்டவன்

**Anugraham**



**Pitadhipathi Srimad Andavan SriVaraha MahaDesikan**

© Srirangam Srimad Andavan Ashramam

Document redesigned and republished using
**Google Translate** and **TT28 Publisher** @ **www.aradhanam.org**


॥ श्रीः ॥
श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकाभ्यां नमः
ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்
(வழுத்தூர் ஆண்டவன்)
ஆவணி—பூரட்டாதி

॥ श्रीः ॥


श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकाभ्यां नमः



கோபாலதேசிகபதாப்ஜமதுவ்ரதஸ்ய
ப்ரஜ்ஞாவிரக்திகருண முகஸத்குணப்தே: ।
வேதாந்த லக்ஷ்ம ணமுநே: ச்ரிதபாகதேயம்
பாதாரவிந்தயுகளம் சரணம் ப்ரபத்யே ॥

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணிபாதுகாப்யாம் நம :



# ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரம வரலாறு

வெளியீடு :

**ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்**

31, தேசிகாச்சாரி சாலை, மைலாப்பூர், சென்னை=4

நந்தந ஸ்ரீ ஆனி மீ 19 உ

ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனின் 24 ஆவது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தன்று வெளியிடப்பட்டது.

3 - 7 - 2012

# ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய குருபரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 பெரியநம்பி
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 திருக்குருகைப்பிரான் பிள்ளான்
12 ஸ்ரீவிஷ்ணுசித்தர்
13 நடாதூர் அம்மாள்
14 அப்புள்ளார் (ராமானுஜாசாரியார்)
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
17 கடிகாாதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
18 ஆதிவண்ஶடகோப ஸ்வாமி
19 வரதவிஷ்ண்வாசாரியர்
20 மஹாதயாதீஸ
21 அஹோபிலாசார்யர்
22 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
23 பஞ்சமதபஞ்ஜநம் தாதாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 உபநிஷத்பாஷ்யகாரர்
26 ரங்கநாத ஸ்வாமி

27 வீரராகவாசார்யர்

28 ஸ்ரீரங்கபதி தேசிகர்

29 கல்யாணாவஹ ரங்நாத ஸ்வாமி

30 ஸாக்ஷாத் ஸ்வாமி

31 திருக்குடந்தை தேசிகன்

32 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்

33 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்

34 பெரியாண்டவன்

35 சின்னாண்டவன்

36 காடந்தேத்தி ஆண்டவன்

37 தேரழுந்தூர் ஆண்டவன்

38 ஆக்கூர் ஆண்டவன்

39 தென்பரை ஆண்டவன்

40 திருக்குடந்தை ஆண்டவன்

41 மைஸூர் ஆண்டவன்

42 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

# ஸ்ரீரஹஸ்ய பரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 பெரியநம்பி
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 (மடைப்பள்ளிஆச்சான்) ப்ரணதார்த்திஹராசார்யர்
12 ஆத்ரேய ராமானுஜாசார்யர்
13 ஆத்ரேய ரங்கராஜாசார்யர்
14 அப்புள்ளார் (ராமானுஜாசாரியார்)
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
17 கடிகாாதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
18 வரத விஷ்ண்வாசார்யர்
19 மஹாதயாதீஶர்
20 அஹோபிலாசார்யர்
21 வாத்ஸ்ய வரதாசார்யர்
22 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
23 பஞ்மதபஞ்சநம் தாதாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 ராமானுஜசார்யர்
26 வாத்ஸ்யவேங்கடேஸாசார்யர்

27 வீரராகவாசார்யர்
28 ஸ்ரீரங்கபதி தேப்பிகர்
29 கல்யாணாவஹ ரங்நாத ஸ்வாமி
30 ஸாக்ஷாத் ஸ்வாமி
31 திருக்குடந்தை தேஶிகன்
32 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்
33 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்
34 பெரியாண்டவன்
35 சின்னாண்டவன்
36 காடந்தேத்தி ஆண்டவன்
37 தேரழுந்தூர் ஆண்டவன்
38 ஆக்கூர் ஆண்டவன்
39 தென்பரை ஆண்டவன்
40 திருக்குடந்தை ஆண்டவன்
41 மைஸூர் ஆண்டவன்
42 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

# ஸ்ரீபகவத்விஷய பரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 திருமாலையாண்டான்
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 திருக்குருகைப்பிரான் பிள்ளான்
12 ஸ்ரீவிஷ்ணுசித்தர்
13 நடாதூர் அம்மாள்
14 அப்புள்ளார்
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 நயினாராசார்யர்
17 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
18 கடிகாாதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
19 ஆதிவண்ஶடகோபர்
20 த்ருதீய பராங்குஸ ஸ்வாமி
21 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
22 வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்
23 ஸ்ரீாைல ஸ்ரீநிவாஸாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 முநிவாஹந ஸ்வாமி
26 சந்த்ரகிரி வேங்கடாசாரியர்

27 கல்யாணாவஹ ரங்கநாத ஸ்வாமி
28 ஸாக்ஷாத் ஸ்வாமி
29 பாதுகாஸேவகராமானுஜ ஸ்வாமி
30 திருக்குடந்தை தேஶிகன்
31 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்
32 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்
33 பெரியாண்டவன்
34 சின்னாண்டவன்
35 காடந்தேத்தி ஆண்டவன்
36 தேரழுந்தூர் ஆண்டவன்
37 ஆக்கூர் ஆண்டவன்
38 தென்பரை ஆண்டவன்
39 திருக்குடந்தை ஆண்டவன்
40 மைஸூர் ஆண்டவன்
41 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

# ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் பரம்பரையில் ஆசார்யர்களின் சுருக்கமான விவரங்கள்.

## ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன்

வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகன்: அவதாரம் - மாடபூசி நைத்ருவ காய்யப கோத்ரத்தில் ஸ்ரீநிவாஸாசார்யரின் திருக்குமாரராக 1743 ருதிரோத்காரி ஆவணி பூரட்டாதியில். ப்ரம்ஹசர்யத்தி லிருந்து ஸந்யாஸாஸ்ரமம். ஸந்யாஸம் ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேஶிகனிடம். காலக்ஷேபம் ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகனிடம். ப்ரபத்தி ஆசார்யர் திருக்குடந்தை தேசிகன். ஆராவமுதாழ்வான் திருவடிகளில் ப்ரபத்தி. 72 திருநக்ஷத்ரங்களுக்கு மேலும் எழுந்தருளியிருந்ததாகவும், சுமார் 52 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளதாகவும் தெரிகிறது.

## ஸ்ரீமத் திருத்துறைப்பூண்டி ஆண்டவன்

ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகன் .அவதாரம் விளக்குடி க்ராமம். ஈயுண்ணி பாரத்வாஜ வம்ஸம். ஐப்பசி உத்திரட்டாதி. வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ஸந்யாஸம் எல்லாம் வழுத்தூர் ஆண்டவன் திருவடிகளில்.

## பெரியாண்டவன்:

ஸ்ரீநிவாஸ ஸ்ரீமத் மஹாதேஸிகன். பூர்விகம் காஞ்சீபுரம் அருகில் பிலியரணை எனும் ஸ்ரீக்ராமம். அவதாரம் : காஞ்சீபுரத்தில் ஸாண்டில்ய கோத்ரம் பகல் தீவட்டி ( திவா ப்ரதீபம்) ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யருக்கு திருக்குமாரராக. 25.2.1801 கலி 4900 ரௌத்ரி மாசி புஷ்யம் . அவதாரத் திருநாமம்

ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். ஸமாஸ்ரயணம் ஸாமா பெரியப்பன் ஸ்வாமியிடம். ப்ரபத்தி ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன் திருவடிகளில் ஸ்ரீரங்கம் பெரிய பெருமாள் ஸன்னிதியில். வேதாந்த காலக்ஷேபம், 30 திருநக்ஷத்ரத்தில் பூண்டி ஆஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ திருத்துறைப் ஆண்டவனிடம். 54 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 1884 ல் தைமாதம் க்ருஷ்ணபக்ஷ த்ரயோதசியில் அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம்.

## ஸ்ரீமத் சின்னாண்டவன்

ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் - வேளியநல்லூர் ஸங்கபுரம் பஸடமர்ஷண கோத்ரம் ஸ்ரீ க்ருஷ்ண தாதாசார்யருக்கு திருக்குமாரராக. 1826 விய வர்ஷம் கார்த்திகை மகம். அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸராகவாசார்யர். காலக்ஷேபம், ப்ரபத்தி, ஸந்யாஸம் எல்லாம் ஸ்ரீமத் பெரியாண்டவனிடம். ப்ரபத்தி ஸ்ரீரங்கம் பெரிய பெருமாள் சன்னிதியில். ஸந்யாஸம் 1883 சுபானு ஐப்பசி மாதம். பத்து சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 68 ஆம் திருநக்ஷத்ரத்தில் 1894 விஜய வர்ஷம் தை சுக்ல சப்தமியில் அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமம்.

## ஸ்ரீமத் காடந்தேத்தி ஆண்டவன்

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் காடந்தேத்தி ரகுநாதாசார்யருக்கும் ஜானகி அம்மாளுக்குக்கும் திருக்குமாரராக 1829 விரோதி வர்ஷம் ஆவணி மூலம்.அவதாரத் திருநாமம் வரதவேதாந்தாசார்யர். வேதாந்த காலக்ஷேபம் பெரியாண்டவனிடம். ப்ரபத்தி பெரியாண்டவனால்

பெரியபெருமாளிடத்தில். 1905 ல் விஸ்வாவஸு வர்ஷம் ஆவணி மாதம் 76 திருநக்ஷத்ரத்தில் ஸந்யாஸம் 38 ஆம் பட்டம் திருக்குடந்தை அழகிய சிங்கரிடம். 1909 கீலக மாசி க்ருஷ்ணபக்ஷ த்வாதசியன்று அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் தேரழுந்தூர் ஈயுண்ணி பாரத்வாஜ கோத்ரம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராக 1872 ப்ரஜோத்பத்தி ஆவணி பூரட்டாதி . ஸமாஸ்ரயணம் பெரியாண்டவனிடம். வேதாந்த காலக்ஷேபம் ப்ரபத்தியும் சின்னாண்டவனிடம். சின்னாண்டவன் திருவடிகளில். ஸந்யாஸம் 36 திருநக்ஷத்ரத்தில் 1908 ல் கீலக வர்ஷம் ஆவணி மாதம் ஸ்ரீ காடந்தேத்தி ஆண்டவனிடமிருந்து. 39 ஆம் பட்டம் ஸ்ரீ மன்னார்குடி அழகிய சிங்கருக்கு ஸந்யாஸாஸ்ரமம் கொடுத்து அனுக்ரஹித்தார். 23 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 60 ஆம் திருநக்ஷத்ரத்தில் 1932 ல் ஆடி க்ருஷ்ண பஞ்சமியில் ப்ரஜோத்பத்தி திருநாடலங்கரித்தாயிற்று. ப்ருந்தாவனம் காஞ்சீபுரம் பாதுகாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் :

ஸ்ரீநிவாஸ மஹாதேபஸிகன். அவதாரம் மௌத்கல்ய கோத்ரம் ஆக்கூர் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு 1880 விக்ரம வர்ஷம் புரட்டாசி உத்ரட்டாதி. பூர்வாஸ்ரம திருநாமம் ரங்கநாதாசார்யர். பஞ்ச ஸம்ஸ்காரம் தம் மாதுலரிடத்தில் . வேதாந்த காலக்ஷேபம் தேரழுந்தூர் ஆண்டவனிடம். ப்ரபத்தி ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனால் ஸ்ரீ தேவப் பெருமாள் திருவடிகளில், ஸ்ரீ

தேரழுந்தூர் ஆண்டவனிடம் ஸந்யாஸம் ஸ்வீகரித்திருந்த திருக்குடந்தை நாராயண யதியினிடத்தில் 1932 ல் ஸ்ரீரங்கம் ஆஸ்ரமத்தில் ஸந்யாஸம். 17 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்தாயிற்று. 1947 ல் விய வர்ஷம் பங்குனிக்ருஷ்ணத்வாதசியில் 19.3.1947 அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன்

ரங்கநாதமஹாதேஸ்ரிகன். அவதாரம் தென்பரை வங்கீபுரம் பாரத்வாஜம் சேஷாத்ரியாசார்யருக்கும் செங்கமலத்தம்மாளுக்கும் திருக்குமாரராக 19.8.1886 விய வர்ஷம் ஆவணி ரேவதியில். அவதாரத் திருநாமம் வேங்கட ராகவாசார்யர். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனிடம். தேரழுந்தூர் ஆண்டவனால் ஸ்ரீ வடுவூர் சக்ரவர்த்தித் திருமகன் திருவடிகளில் ப்ரபத்தி. ஸன்யாஸம் ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனிடமிருந்து 6.10.1946 விய வர்ஷம் ஐப்பசி 21 சுக்ல த்வாதசி யன்று. 15 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 5.4.1963 ல் சுபக்ருத் பங்குனி சுக்ல த்வாதசியில் 76 திருநக்ஷத்ரத்தில் தமக்கு அடுத்த ஆசார்யர் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனுக்கு ஸ்தானம் அருளின அன்றே திருநாடலங்கரித்தபடி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்தராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் ஆத்ரேய கிடாம்பி திருக்குடந்தை ஸ்ரீ பத்மநாபாசார்யர் கோமளவல்லி தம்பதிக்கு 1907 பராபவ பங்குனி புஷ்யம் அன்று அம்மான்

க்ருஹம் ராயம்பேட்டை க்ராமம் காருகுடி அக்ரஹாரத்தில். அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். இவரை ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி என்று அழைப்பர். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம், பகவத் விஷயம், கீதாபாஷ்யம் காலக்ஷேபம் ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவன் திருவடிவாரத்தில். ஸ்ரீபாஷ்யாதிகள் ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன் திருவடிவாரத்தில் . ப்ரபத்தி ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனால் ஆராவமுதாழ்வான் திருவடிகளில். ~~ 5.4.1963 சுபக்ருத் பங்குனி சுக்ல த்வாதசியன்று 56 திருநக்ஷத்ரத்தில். 26 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 10.4.1989 விபவ வர்ஷம் பங்குனி சுக்ல பஞ்சமியில் திருநாடலங்கரித்தாயிற்று. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேரிகன். அவதாரம் கௌண்டின்ய கோத்ரம் ஹரிஹரபுரம் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் ஸ்ரீ ரங்கநாயகம்மா தம்பதிக்கு 19.8.1909 ஸௌம்ய ஆவணி மாதம் உத்தரம் திருநக்ஷத்ரத்தில் ஸோஸலை க்ராமத்தில். அவதாரத் திருநாமம் கோபாலாசார்யர். ஸமாஸ்ரயணமும் ப்ரபத்தியும் 14 திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் திருவடிகளில். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீஆக்கூர் ஆண்டவன் திருவடிகளில். 11.4.1988 ப்ரபவ வர்ஷம் பங்குனி மாதம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனிடமிருந்து ஸந்யாஸம். ஒரு சாதுர்மாஸ்யம். 22.5.1989 வைகாசி க்ருஷ்ண த்விதீயை அன்று திருநாடலங்கரித்தபடி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமம்.

## ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசரிகன். அவதாரம் பாரத்வாஜம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராய் திருவஹீந்த்ரபுரத்தில் 1935 யுவ வர்ஷம் வைகாசி திருவாதிரையில். பூர்வாஸ்ரமத் திருநாமம் ஸ்ரீ பூவராஹாசார்யர். திருத்தகப்பனாரிடம் ஸமாஸ்ரயணம். வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ப்ரேஷ மந்த்ரம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளில். ஸந்யாஸாஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ பெரியாண்டவன் ப்ருந்தாவனத்திலிருந்து 1.6.1989 விபவ வைகாசி மாதம் க்ருஷ்ண த்வாதசி . 23 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளபடி.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ரங்கநாத மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேரிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேமிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேமிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஸிகாய நம:
ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

## ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

நாமெல்லாரும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எனப்படுகிறோம். விஷ்ணு என்றால் உடலுள் உயிர் போல் திடவிசும்பு எரி வளி நீர்நிலம் இவைமிசை... உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன் .. என்கிறபடி, எல்லாவற்றையும் வ்யாபித்தும் தரித்தும் நியமித்தும் இதுகளால் வரும் பெருமையை அடைந்து சேஷியாயும் ஸ்வாமியாயும் ஆத்மாவுமாகவும் இருப்பவன். நாமெல்லோரும் அவனால் தார்யர்களாயும் நியாம்யர்களாயும் சேஷராயும் தாஸர்களாயும் இருப்பதால் அவனுக்குச் சரீரமெனப்படுவோம். விஷ்ணோ: இமே... வைஷ்ணவா: என்று சரீர சரீரிபாவ ஸம்பந்தமுடையவர்கள். இன்னும் நமக்கு விஷ்ணுவே மாதா பிதா என்கிறபடி விஷ்ணுவுடன் பல சம்பந்தமுடையவர்கள் வைஷ்ணவர்கள்.

விசிஷ்டாத்வைத மதத்தில் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுபவனும் நாராயணனே. நமக்கு இவனே ஈஸ்வரன், ஸ்வாமி, பரதேவதை. இந்த மதத்தில் ஈஸ்வரன் என்பதுபோல் ஈஸ்வரி என்றும் சொல்லப்படுகிறபடியால், நமக்குத் தாயார் மஹாலக்ஷ்மி இருவர்களும் யஜமானர் யஜமானிகள். தாய்தந்தைகள் குழந்தைகளை ரக்ஷிப்பதற்கும் நாம் அவர்களை அவர்களிஷ்டப்படி பெருமைப் படுத்தவும், கார்யம் செய்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளை நாம் இப்பொழுது செய்து கொண்டிருக்கவில்லை. அநாதியாய் நாம் செய்த அபராதத்தால் கோபம் கொண்ட ராஜாவாய் இருக்கும் தகப்பன், தப்புச் செய்யம் பிள்ளைகளை அவர்களின் நன்மைக்காக சிறைச் சாலையில் போடுவதுபோல் நம்மை இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் தள்ளியிருக்கிறான். இந்தப் பாழும் ப்ரக்ருதியோ உள்ள ஸ்வரூபத்தை மறைத்தும், விபரீத ஜ்ஞானத்தை விளைவித்தும் தன் விஷயத்தில் போக்கியதையை உண்டுபண்ணக் கூடியது. அதனுடைய சம்பந்தத்தால் நாம் ஸ்வரூபத்தை மறந்து நமக்கு கர்ம லப்தங்களான தேஹங்களில் போக்யத்வ புத்தியை உண்டுபண்ணிக் கொண்டு இந்த ஸம்ஸாரத்தில் பிறப்பும் இறப்பும் உள்ளவர்களாய் இருந்து கொண்டு கரை ஏற வழி தெரியாதவர்களாக இருக்கிறோம்.

நாம் இப்படியிருந்தும் பரம காருணிகனாயும் குடல் துவக்கு (சம்பந்த)முள்ளவனுமான ஸர்வேய்வரன் கெட்ட பிள்ளைகளை நல்ல வழி நடத்தப் பாடுபடுவதுபோல் நாம் அறியாமல் செய்த தப்புகளைத் தள்ளியும் மற்றவைகளை மன்னித்தும், அஜ்ஞாதமாகவும், யாத்ருச்சிகமாகவும், ப்ராஸங்கிகமாகவும் நேர்ந்தவைகளுமான சுக்ருதங்களை முன்னிட்டு இந்த நல்ல

ஜன்மத்தைக் கொடுத்ததுபோல் நற்கதியை அளிக்கவும் வழி பண்ணுகிறான்.

இந்த ஸம்ஸார மென்பது எட்டிமரம் போல் அண்டினவனை அழியச் செய்யக் கூடியது. அதிலும் பிழைப்பிக்கும் பழம் இரண்டு. ஒன்று பகவத்பக்தி. இன்னொன்று ஸத்ஸங்கம். ஸத்ஸங்கத்தை மோக்ஷவாசலாய்ச் சொல்லுவார். அந்த ஸத்ஸங்கத்தை உண்டுபண்ணியும் அந்த ஸத்துக்களிடம் அத்வேஷம், ஆபிமுக்யம், சம்பாஷணம் இவைகளையும் உண்டுபண்ணி நல்ல ஆசார்யர்களை அடைவிப்பிக்கிறான்.

ஆசார்யர்கள் என்பவர்கள் பகவதவதாரங்களே. முன் யுகங்களில் ஹிரண்யகசிபு ராவணாதிகள் போன்றவர் தேஹபலத்தால் சாதுக்களை ஹிம்ஸித்து வந்தார்கள். இந்த யுகத்தில் அவர்களைப் போன்றவர்கள், புத்தி பலத்தால் வேதபாஹ்யர்களாயும் வேதத்துக்குச் சரியான அர்த்தம் தெரியாதவர்களாயும் பிறந்து, கெட்ட மதங்களை உண்டுபண்ணி நம் புத்தியைக் கெடுப்பார்கள். காணாதாள், சாக்கியாள், பாஷண்டாள், இவர்களால் வேதமார்க்கம் முன்பு அழிக்கப்பட்டது. அவர்களைப் பகவான் திரிதண்ட தாரியாய் தத்தாத்ரேயராய் அவதரித்து அந்த மதங்களை நிரஸித்து அந்த வேதமார்க்கத்தை ரக்ஷித்தார். இன்னும் கிணற்றில் விழுந்த குழந்தையைக் கையால் எடுப்பதுபோல், ஸம்ஸாரத்தில் விழுந்த நம்மை சாஸ்த்ரமென்கிற கையால் எடுப்பதற்காக பல ஆசார்யர்கள் ரூபியாக அவதரித்தவன்.

இப்படி அவதரித்தும் நாம் ஏற்கனவே கொடுத்த வேதம் சாஸ்த்ரம் முதலியவை விஸ்தாரமுள்ளன. இவர்களோ அல்பஞர்கள். அல்ப சக்திகள், அல்ப ஆயுஸ் உள்ளவர்கள்.

அதற்காக அந்த வேதங்களுக்குள் ஒன்றான அதர்வ வேதத்தின் பிரஸான உபநிஷத்தில் பிரியச் சொல்லி, ஒன்றாகச் சேர்க்கப்பட்ட அஷ்டாக்ஷரம் என்னும் மந்த்ரத்தை நரநாராயண ரூபியாய் அவதரித்து குரு சிஷ்ய ரூபியாய் உபதேசிதது நாரதாதிகளையிட்டுப் பரவச் செய்தான். இம்மந்த்ரம் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுவதுபோல் நாம் அறியவேண்டிய எல்லாச் சங்கதிகளையும் காட்டக் கூடியது. இதனால் ஸ்வரூப ஜ்ஞானம் தெரிந்து நமக்கு வேண்டிய புருஷார்த்தத்தையும் அதற்கு வேண்டிய மார்க்கத்தைத் தெரிந்து அனுஷ்டிக்க வேண்டியதற்காக பாஞ்சராத்ராதிகளில் சொல்லப் பட்டிருக்கும் த்வயம், கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள சரம ஸ்லோகம், ஆக இந்த மூன்று மந்த்ரங்களையும் ஸத்குருவை அடைந்து உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியது. இப்படிப் பெற்றாலும் நமக்கு நல்ல புத்தி உண்டாவது கஷ்டம்.

ஏனெனில் நாம் பூர்வ ஜன்மங்களில் ஆசுர ஸ்வபாவத்தை அடைந்து பகவத் த்விட்டுகளாயிருந்த படியால் நம்மை நரகாதிகளில் தள்ளியும் இவர்கள் நம்மை அறியக் கடவர்களில்லை, இவர்கள் நம்மை வசீகரிக்க கடவர்களில்லை, என்று ஈஸ்வரன் பூர்வாபராதத்தால் இட்ட நினைப்பு ஈடுமாறுவதற்காக அஸ்துமே.. என்றால் அஸ்துதே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே,.. என்ற திருமுகப் பாசுரமும் ஸதாசார்யன் அனுக்ரஹமும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தி என்றும் மூன்று ப்ரதான காரணங்கள்.

தாயார் கடாக்ஷமில்லாவிடில் நல்ல புத்தி, நல்ல நடவடிக்கை உண்டாகாது. ஆதலால் அவள் கடாக்ஷம் வேணும்.

கூடியவரையில் ஸாத்விகர்களாயும் ஆவச்யக விஷயத்தில் ஞானக் குறைவு இல்லாதவர்களும், டம்பம் அசூயை ஏமாற்றல் இவைகள் இல்லாதவர்களுமான நல்ல ஆசார்யர்கள் இவனுக்கு நல்ல க்ஷேமங்கள் உண்டாக வேண்டுமென்று அவர்கள் நினைப்பதாகிற அனுக்ரஹமும் வேண்டும். பிறகு, தான் ஸத்வோத்தரனாய் ஸம்யகுபஸந்நனாய் ஸாவதானனுமாய் இருக்கும் அவஸ்தையில் க்யாதி லாப பூஜா நிரபேக்ஷகர்களாய்ப் பரமகாருணிகர்களான ஸதாசார்யர்கள் அநபேக்ஷித விஸ்தரமும் அபேக்ஷித ஸங்கோசமும் இல்லாதபடி ஸர்வலோகங்களுக்கும் பிதாவும் மாதாவுமாயிருக்கும் ஸ்ரிய:பதி நாராயணன் அவன் எல்லாரையும் காக்கும் இயல்பினன் என்றபடி சரண்ய பூதன், அவனையே சரணமடையுங்களென்று சாதிக்கும் சுருங்கிய உபதேசத்தையும் பெற வேண்டும். இப்படி நாம் குரூபதேசத்தைப் பெற்றால்தான் நமக்கு நன்மை விளையும்.

அவர்கள் நமக்கு உபதேசம் பண்ணும் போது, முன்பு ஜன்மத்தால் ஸூத்ரனாய் பிறந்து ப்ரஹ்மோபதேச மென்ற கர்மத்தால் ப்ராஹ்மணனாக ஆகியிருக்கும் நம்மை ப்ரஹ்மோபதேசத்துக்கு முன்பு ஜாதகர்மம், நாமகரணம் அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் என்கிற கர்மங்களால் ஸம்ஸ்கரிக்கப் பட்டிருப்பதுபோல் காயத்ரியிலும் பெரியதும் ஸகல வேதம் முதலியவைகளை தன்னிடம் அடக்கிக் கொண்டுள்ளதும் அதை ஜபிப்பதால் அசூயை முதலிய ஆந்தர வ்யாதிகளையும் ஜ்வரம் முதலிய பஹிர்வ்யாதிகளையும் ஸ்வரூப ஜ்ஞானமில்லாமையாகிற பஞ்சத்தையும் பணப் பஞ்சத்தையும் 'நான், என்னுடையது' என்கிற அஹங்கார ஆத்மாபஹார சௌர்யாதிகளையும் போக்கி, தேஹாத்ம

விவேகம், ஆத்ம பரமாத்ம விவேகம் ஆகியவற்றை தரக் கூடியதுமான உபதேசத்தை சிஷ்யன் பெறுவதற்குத் தகுதியாக தாபம், புண்ட்ரம், நாம, மந்த்ரம், யாகம் என்கிற ஐந்து ஸம்ஸ்காரங்களையும் செய்வித்து, உபதேசிக்க வேணும்.

தாப மென்றால், நாம் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணமுள்ள ப்ராக்ருத தேஹமுடையவர்கள். பரமாத்மா விஷயமான பவித்ரமான பஞ்சோபநிஷந் மந்த்ரங்களால் பாஞ்ச பௌதிக தேஹத்தை லயாதிக்ரமத்தால் ஸம்ஹரித்தும், மறுபடி ஸ்ருஷ்டியாதி க்ரமத்தால் ஸ்ருஷ்டிப்பதுமாகிய பூத சுத்தியைச் செய்து, அதில் அவர் சிந்நங்களான சங்க சக்ராதிகளை ஹோமாதிகளைச் செய்து சுத்தீகரித்து ஆசார்யர் அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லித் தரிப்பிக்கச் செய்ய வேணும்.

பிறகு நமக்கு, பாபத்தை போக்குவதும் ஆயுஸ்ஸை வளர்ப்பதுமான ஸ்வேதமிருத்திகை (திருமண்) மந்த்ரங்களைச் சொல்லிக் குழைத்து பகவத் பாதாக்ருதியாய் நெற்றி முதல் 12 இடங்களில் ஊர்த்வமுகமாய், ஸச்சித்ரமாய் தரித்தவைக்க வேணும், நம் மதத்துக்குத் தாயாரும் பரதைவதமாகையால் அவருடைய சின்னமான ஸ்ரீசூர்ணத்தை நடு இடங்களில் அவருடைய மந்த்ரங்களைச் சொல்லி ஆசார்யர் தரிக்கவைக்க வேணும்.

நாம் அவர்களுக்கு தாஸனனாதால் ஆசார்யர் சிஷ்யனுக்கு ராமதாஸன், க்ருஷ்ணதாஸன் என்று பேரும் வைக்க வேணும்.

பிறகு தன்னுடைய குரு பரம்பரையைச் சிஷ்யனுக்குச் சொல்லிவித்துத் தாங்களும் அனுசந்தித்துக் கொண்டு மூன்று மந்த்ரங்களையும் உபதேசிக்க வேணும். ஸ்ரீமத் ராமாயணம், பாதுகாஸஹஸ்ரம் இவைகளையும் உபதேசித்து ஸங்க்ரஹமாக பகவதாராதன க்ரமத்தையும் உபதேசிக்க வேணும்.

ஆகையால் நாமும் நல்ல குருக்களை அடைந்து பஞ்ச ஸம்ஸ்காராதிகளைச் செய்து கொண்டு உஜ்ஜீவிக்க வேணும். மந்த்ர மந்த்ரார்த்தங்களை க்ரஹித்து உபதேசித்துக் கொண்டு, 'நாம் யார், நமக்கு யஜமானன் யார், அவரை அடைவதால் வரும் பயன், அடைவதற்கு விரோதி, அதைப் போக்கும் வழி இவைகளாகிற அர்த்த பஞ்சகத்தை அறியவேண்டும். (1)நாம் (2) பெருமாளுடைய (3) கோபத்தைப் (4)போக்கிப் (5) பெருமாளிடம் போய், பெருமாளுக்குக் கார்யம் செய்ய வேணுமென்று இவ்வாறாக அர்த்த பஞ்சகத்தை நம்மாண்டவன் (ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்) எப்பொழுதும் இந்த புத்தி நமக்கு வரவேண்டியதற்காக ஸாதித்தாகும். இதை அறிந்தால்தான் வைஷ்ணவனாவோம்.

இவைகளை உபதேசிக்கிற ஆசார்யாளிடத்திலும் அவர்களுடைய பரம்பரையிலும் விசேஷப் ப்ரதிபத்தி வேணும். அதற்காக நம் ஸம்ப்ரதாய ஆசார்ய பரம்பரையைப் பற்றிக் கொஞ்சம் எழுதப்படுகிறது.

இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஆதியில் ப்ரதமாசார்யன் பெருமாள். அவர் வேதம் முதலியதைக் காப்பாற்றி வ்யாஸாதி ரூபிகளாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து அதின் உபாய பாகத்திலுள்ள அர்த்தங்களைச் சுருக்கி ப்ரஹ்ம ஸூத்ரமென்றும் தர்ம ஸூத்ர மென்றும் செய்தருளினார்; ஸ்ரீ பாஞ்சராத்ர ஸாஸ்த்ரத்தை நேராகவே உபதேசித்தார்.

பிறகு 2வது ஆசார்யர் தாயார். அவர் பெருமாளிடமிருந்து பாஞ்சராத்ர ஸாஸ்த்ரத்தைக் கேட்டு லக்ஷ்மீ தந்த்ரம் முதலியவைகளால் வெளியிட்டருளினாள்.

3வது விஷ்வக்ஸேனர். இவருடைய அனுமதியின்றி ஒரு சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்காதாதலாலும் நம்மாழ்வாருக்கு ஸமாச்ரயணம் - மந்த்ரோபதேசம் இவைகளைச் செய்ததாலும் நம் மூன்றாவது ஆசார்யர்.

# ஆச்ரம வரலாறு

## ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் ஸ்ரீமத் வழுத்தூராண்டவன்

### திருக்குடந்தை தேசிகனும் வழுத்தூர் ஆண்டவனும்

திருக்குடந்தை தேசிகனைக் கொண்டு தம் ஓரான்வழி ஸம்ப்ரதாயத்தை இன்னும் விருத்தி செய்யத் திருவுள்ளம்பத்தி திருமாலிருஞ்சோலைக்கு அருகே வத்திராயிருப்பு ஸ்வாமி, திருநெல்வேலிக்கு அருகே செய்யானம் ஸ்வாமி, திருக்குடந்தைக்கு மேல் புறமாயுள்ள வழுத்தூர் க்ராமத்தில் மாடபூசி நைத்ரவம்சத்தில் ப்ரஹ்ம வித்தான ஸ்ரீநிவாஸாசாரிடம் ருதிரோத்காரி (1743) ஆவணி பூரட்டாதியில் அவதரித்து ப்ரஹ்மசர்ய ஆஸ்ரமத்திலேயே ஸகலங்களையும் உணர்ந்து கல்யாணம் தனக்குச் செய்ய ப்ரஸ்தாவித்த ராத்திரியே கிளம்பிப் போய் விரக்தராய் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த வழுத்தூர் ஸ்வாமி ஆகிய மூன்று ஸ்வாமிகளை நீங்கள் துரீயாச்ரமத்தை க்ரஹித்துக் கொண்டு, திருக்குடந்தை தேசிகனை ஆச்ரயித்து ஸம்ப்ரதாயார்த்தங்களை க்ரஹித்துக் கொண்டும் உஜ்ஜீவியுங்கள் என்று ஸ்ரீ ஆராவமுதன் ஸ்வப்னத்தில் நியமித்தருளினார்.

அதைக் கேட்டு மூன்று ஸ்வாமிகளும் துரீயாச்ரமத்தை க்ரஹித்து ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன், ரங்கனாத மஹா தேசிகன், வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் என்று மூன்று திருநாமங்களையும் வஹித்து, திருக்குடந்தையில் அமுதன் ஸந்நிதியில் முன்பு திருக்கோவிலூர் இடைகழியில் மூன்று

ஆழ்வார்கள் சேர்ந்ததுபோல் சேர்ந்து பெருமாளை மங்களாஸாஸனம் செய்து கொண்டு தங்கள் மனோரதங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு திருக்குடந்தை தேசிகன் திருவடிவாரத்துக்குச் சென்று, போகும்போதே (ஆசார்யம் த்வாம் வ்ருணே) என்று ஆசார்யவரணம் பண்ணி தெண்டம் ஸமர்ப்பித்தார்கள்.

ஸ்ரீ ஆராவமுதன் ஏற்கனவே இவர்களுக்குப் போலவே மூன்று முனிகள் ஏளுவார்கள், அவர்களுக்கு ஸ்வப்னத்தில் ஸம்ப்ரதாயப்ரவசனம் செய்துவைக்கக் கடவாய் என்று ஸ்ரீ திருக்குடந்தை தேசிகனுக்கும் ஸாதித்திருந்ததால், ஸ்வாமியும் போரவுகந்து இவர்களுடைய ஞான - பக்தி-வைராக்யாதிகளைக் கண்டு விஸ்மயித்து அதிக பரீக்ஷையன்றியே ஸம்ப்ரதாய க்ரந்தங்களை உபதேசித்தும் ரஹஸ்யார்த்த அனுஷ்டானங்களை சிக்ஷிப்பித்தும் அமுதன் ஸந்நிதியில் இவர்களுக்கு ஆசார்ய நிஷ்டையாய் ஆராவமுதாழ்வான் சன்னிதியில் சரணாகதியும் செய்வித்தருளினார். இப்படி மூன்று ஸந்யாஸிகளுக்கும் ஆசார்யராக சேவை சாதித்ததால் திருக்குடந்தை தேசிகனுக்கு முநித்ரய ஸ்வாமி என்று ப்ரசித்தி ஏற்பட்டது. திருக்குடந்தை தேசிகன் இவர்களைப் பார்த்து நீங்கள் அவரவர்களுக்கு உகப்பான இடத்திலிருந்து கொண்டு, ஸம்ப்ரதாய ப்ரவசனங்களை செய்யுங்கள் என்று நியமித்தருளினார்.

அவர்களும் கொஞ்ச காலம் அந்தப்படியிருந்து, ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருந்துவிட்டு, ஒரு ஸமயம் திருக்குடந்தையில் தம் ஆசார்யன் திருநக்ஷத்ரம் கொண்டாடுகையில் அவ்விடம் மூன்று ஸ்வாமிகளும்

எழுந்தருளி 'ஸ்வாமி நியமனப்படி நாங்கள் செய்து கொண்டிருந்தோம். ஆனால் எங்களுக்கு அதில் ஸ்வல்ப சிஷ்யர்கள்தான் சேர்ந்தார்கள். அதில் எங்களுக்கு ருசியில்லை; எங்களை மனன சீலர்களாய் அனுபவ மாத்ரபராளாய் இருக்க வேண்டுமென்று நியமித்தருள வேணு' மென்று ஸ்ரீநிவாஸஸ்வாமி, ரங்கனாத ஸ்வாமி; இருவர்களும் ப்ரார்த்தித்துக் கொண்டார்கள். அவர்களை அப்படியே இருங்கள் என்று நியமித்துவிட்டு, வழுத்தூர் ஸ்வாமி என்று பெயர் பெற்ற வேதாந்த ராமாநுஜ ஸ்வாமியைப் பார்த்து "முன்பு தேசிகர் திருவடிகளில் ஆச்ரயித்து ஸம்ப்ரதாய ப்ரவசனத்துக்கு நியமிக்கப்பட்ட ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர், வெண்ணைக்கூத்த ஜீயர், ப்ரபாகர ஜீயர் இந்த மூன்றுயதிகளில் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயருக்குமட்டும் ரிஷ்ய ஸந்ததியும் மற்றவர்களுக்கு இல்லாததுபோல் இதுவும் ஆயிற்று. பாஷ்யகாரரைப் போலிருக்கும் நீரே இந்த ஸம்ப்ரதாயத்தை வ்ருத்தியாக்கக் கடவீர். காலம் கலிகாலம். அதிக பரீக்ஷை சோதனம் வேண்டாம்" என்று நியமித்தருளினார். ஸ்வாமியும் (தன்யோஸ்மி) என்று அங்கீகரித்தருளினார்.

ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் ஒரு ஸமயம் தன் சிஷ்யர்களால் உபஹாரமாக ஸமர்ப்பிக்கப்பட்ட த்ரவ்யங்களைக் கொண்டு அமுதனுக்கு ஒரு பதக்கம் செய்து சாத்தியருளினார். அது ஜீவாத்மாக்கள் எல்லாரும் ஸ்ரிய:பதிக்கு கௌஸ்துப ஸ்தானீயர்களாய் ஹ்ருதயத்தில் இருக்க வேண்டியவர்கள். ஆசார்யாரால் ஸமர்ப்பிக்கப்படும் ஜீவர்கள் எல்லாரும் அந்த ஜீவர்களோ, என்று ப்ரசம்ஸிக்கப்படும்படி ரத்னங்களால் இழைக்கப்பட்டு விளங்குகிறது. அதை இன்றும் ஸேவித்துக் கொள்ளலாம்.

இன்னொரு சமயம் ஸ்ரீ அமுதனுக்கு திருப்ரதிஷ்டை செய்விக்க நேர்ந்தபோது மஹாபாகவத ஸ்பர்சம் வேண்டும் அதற்கு ஸ்வாமியே தகுந்தவரென்று ப்ரார்த்திக்க, ஸ்வாமி எழுந்தருளி அதைச் செய்தருளினார்.

பிறகு தம் சிஷ்யர்களான முநித்ரயத்துடனும் (மஹான்களான மூன்று சன்யாசிகளுடனும்) இன்னும் அநேகம் சிஷ்யர்களுடன் த்ரமிடதேசம் பூராவும் பெரிய கோஷ்டியாக திவ்யதேச மங்களாஸாஸன யாத்ரையாக ஸஞ்சரித்தாயிற்று. அநேகம் சிஷ்யர்கள் அப்போது ஆச்சர்யப்பட்டு இவரின் திவ்யவைபவத்தினால் ஈர்க்கப் பட்டு எல்லா இடத்திலும் ஆச்ரயித்தார்கள். இப்படி முனித்ரயத்துடன் பெரிய கோஷ்டியாக எங்கும் ஸஞ்சாரம் செய்தபோது இவருக்கு எங்கும் முநித்ரய ஸ்வாமி என்றும் முநித்ரய ஆசார்யர் என்றும் ப்ரசித்தி தமிழ்நாடு பூராவும் ஏற்பட்டது. அத்தால் இவரின் சிஷ்ய பரம்பரைக்கு இவரைக் கொண்டு முநித்ரய ஸ்வாமி பரம்பரை என்றும் பின்னாளில் இதுவே முநித்ர சம்ப்ரதாயம் என்றும் நாமம் நிலைத்தது.

திருக்குடந்தை தேசிகன் திவ்யதேசமங்களாஸாஸன யாத்ரைக்கு புறப்பட்டபோது முதலில் ஆராவமுதாழ்வா னிடம் விடைகொண்டு சிஷ்யர்கள் அநுயாத்ரையாக வர முதலில் குருகைக் காவலப்பன் கோவிலில் வேதநாராயணப் பெருமாளை மங்களாஸாசனம் செய்து, வீரநாராயணபுரத்தில் ஸ்ரீ நாதமுனிகள், ஆளவந்தாரையும் அடிபணிந்து, ஸ்ரீமுஷ்ணத்தில் அம்புஜவல்லித் தாயாரையும் வராஹ நயினாரையும் திருவடி தொழுது, திருக்கோவிலூர் எழுந்தருளி ஆயனாரையும், ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனுடைய திருமாளிகை ஸ்தலத்தையும்

சேவித்துக் கொண்டு அங்கிருந்து முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில் என்றும் காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கொவ்வா என்றும் தேசிகன் போர வுகந்தருளின பெருமாள் கோவிலேற வெழுந்தருளி அனந்த ஸரஸ்ஸில் நீராடி பெருந்தேவித் தாயார் புருஷகாரமாக பேரருளாளனைத் தொழுது அம்மாள் காலக்ஷேப கோஷ்டி மண்டபத்தை சேவித்து அங்குள்ள அனைத்து திவ்யதேசங்களையும் சேவித்துக் கொண்டு ஸ்வாமி தேசிகனை அவதாரஸ்தலத்தில் மங்களாஸாஸநம் செய்து கொண்டு சிலகாலம் அங்கேயே சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் சாதித்துக் கொண்டு எழுந்தருளின காலத்தில் அனேகம் திருநாமங்கள் இவரின் ஜ்ஞான வைராக்ய அனுஷ்டான வைலக்ஷண்யங்களையும் பரமஸாத்விகதையையும் மூன்று யதிகள் உள்பட் அநேகம் விலக்ஷணமான சிஷ்யர்கள் சதா அநுவர்த்திக்கும் ப்ரபாவத்தையும் கண்டு தேசிகனின் அபராவதாரமே என்று ஆச்சர்யப்பட்டு ப்ரம்ஹவித்துக்கள் எல்லாரும் ஸ்வாமியை ஆச்ரயித்து ஸம்ப்ரதாய க்ரஹணங்களையும் பரஸமர்ப்பணாதிகளையும் செய்து கொண்டார்கள்.

பிறகு அங்கிருந்தும் புறப்பட்டருளி திருமலை யாத்ரையாக திருச்சானூரில் தாயாரை மங்களாஸாஸனம் செய்து, கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜனையும், க்ரமேண ஆழ்வார் தீர்த்தத்தில் ஆழ்வாரையும், வழியில் யதிராஜ ஸப்ததியால் எம்பெருமானாரையும், மலையில் க்ரமேண வராஹநயினாரையும் மங்களாஸாஸநம் செய்து திருவேங்கடமுடையானை ஆராக் காதலுடன் அகலகில்லேன் பாசுரத்தால் அடிபணிந்து தயாசதகத்தால் அனுசந்தித்திருக்க,

பெருமாளும் அர்ச்சகமுகேந நம் தேசிக ஸம்ப்ரதாயத்தை அபிவ்ருத்தி பண்ணக்கடவீர் என்று அருளி தீர்த்தப்ரஸாதாதி பஹுமானங்களையும் அருளினார். ஹர்ஷாபூரிதராய் விடைகொண்டு திருமலை இறங்கி வடதேசத்து எம்பெருமான்களை நோக்கி தண்டம் ஸமர்ப்பித்து மநஸா மங்களாஸாஸநம் செய்து திருஎவ்வுள், திருவல்லிக்கேணி, திருநீர்மலை எம்பெருமான்களை மங்களாஸாஸனம் செய்து திருவஹீந்த்ரபுரத்தில் ஔஷத கிரியில் ஸ்ரீ ஹயக்ரீவர், வேணுகோபாலன், நரசிம்ஹர் மூர்த்திகளை அடிபணிந்து கீழே இழிந்து ஸ்ரீதேசிகன், செங்கமல வல்லித்தாயார், ஸ்ரீ தேவநாதன் மூவரையும் சேவித்திருந்து ஸ்ரீ தேசிக அபிமான ஸ்தலமாகையாலே சில காலம் அங்கேயே எழுந்தருளி யிருந்து ஆச்ரயித்த அநேகம் சிஷ்யர்களை உஜ்ஜீவிப்பித்தருளினார். பின்னர் அங்கிருந்தும் புறப்பட்டருளி திருச்சித்ரகூடம் முதல் தேரழுந்தூர் வரையில் எல்லா எம்பெருமான்களையும் மங்களாஸாஸனம் செய்து திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஸ்ரீ ஆராவமுதாழ்வானை மங்களாஸாஸநம் செய்து சிஷ்யர்களுடன் ஆச்ரமத்துக்கு எழுந்தருளினார்.

சில காலம் சென்றவாறே திருவணை யாத்ரை செய்ய விழைந்து திருவிண்ணகர், திருநறையூர், திருச்சேறை எம்பெருமான்களை அடிபணிந்து ஸ்ரீராமக்ஷேத்ரமெனும் வடுவூர் எழுந்தருளியாயிற்று.

தம் ஆசார்யர் ஸ்ரீஸாக்ஷாத் ஸ்வாமி ஆச்ரமத்துக்கு எழுந்தருளி ஆசார்யர் எழுந்தருளி யிருந்த புண்ய ஸ்தலம் என்று மிகவும்

திருவுள்ளம் ஆகி தேநைஷ பூர்வம் ஆக்ராந்தா ஆம்ரம: ஸ்ரம நாஸந: | மமாபி பக்த்யா தஸ்யைஷ வாமநஸ்யோப புஜ்யதே |

என்றாற்போலே ஆசார்யருசி பரிக்ருஹீதமான அந்த ஆச்ரமத்திலேயே அமர்ந்து ஜபாதிகளை செய்து விட்டு ஸ்ரீராமனை சேவித்து சிலகாலம் அங்கேயே ப்ரவசநம் செய்து கொண்டு இருந்தாயிற்று.

பின்னர் ராஜமன்னார்குடியில் ஸ்ரீ ராஜகோபாலனை சேவித்திருந்து திருமெய்யம் திருக்கோட்டியூர் வழியாக திருப்புல்லாணி எழுந்தருளி பெருமாளை சேவித்துக் கொண்டு திருவணை ஆடி மீண்டு, திருமாலிருஞ்சோலை, திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி முதலான திருப்பதிகளை மங்களாஸாஸநம் செய்து திருக்குடந்தை எழுந்தருளி சம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினார். மீண்டும்

ஸ்ரீ தேசிகன் (பகவத்யான ஸோபாநம்) செய்ததுபோல் இவர் (ஸார்ங்கதந்வஸ்தோத்ரம்) என்று ஒரு ஸ்தோத்ரம் செய்து ஆராவமுதாழ்வானை தினமும் அனுசந்தித்து வந்தார். இவர் தேசிகாவதாரமென்று நினைக்கும்படி அநேக ஸங்கதிகள் இவரிடம் இருந்தன.

ஸாக்ஷாத் அபரதேசிகனாய் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாயத்தை ஸம்ரக்ஷித்து அநேகம் சிஷ்யர்களால் தேசிக ஸம்ப்ரதாயம் நன்கு அபிவிருத்தியாம்படி பண்ணிக்கொண்டு 83 திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். ஆராவமுதாழ்வான் ஒருநாள் 'உம் அவதார கார்யம் தலைக் கட்டியாயிற்று.நம் பெரிய வீடு வந்து காணும்' என்று அர்ச்சக முகேந அருளிச்செய்ய ஸ்வாமியும் ஆர்த்தி மேலிட்டு

ஸ்வாச்ரமத்துக்கு எழுந்தருளி நோவு சாற்றிக் கொண்டு ப்லவ வர்ஷம் கார்த்திகை புஷ்யம் புதன்கிழமை க்ருஷ்ண பஞ்சமீயில் ஸந்யாஸாச்ரமம் ஸ்வீகரித்து அபர்யாப்தாம்ருதன் என்ற திருநாமத்தை ஸ்வீகரித்துக் கொண்டு மறுநாள் ஆயில்ய நக்ஷத்ரத்தில் குருவாரம் ஷஷ்டீ ராத்ரி ஸிம்ஹலக்நத்தில் தம் ஆசார்யரான ஸாக்ஷாத் ஸ்வாமி திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு ஆசார்ய ஸ்ரீபாதுகாதீர்த்தமும் ஸ்வீகரித்து முநித்ரய ப்ரப்ருதி ஶிஷ்யர்களுக்கு தம் ஸ்ரீபாத தீர்த்தத்தையும் அனுக்ரஹித்து ப்ரம்ஹ ரந்த்ரம் திறந்து திருநாடலங்கரித்தார். ஸ்வாமியின் தௌஹித்ரரான இளையவில்லி வேதாந்தாசார்யரைக் கொண்டு திருக்காவேரீ சக்ரதீர்த்தத்தில் திருப்பள்ளி படுத்தி சரமகைங்கர்யங்களை சிஷ்யர்கள் பரக்க நடத்தினார்கள்.

இந்த ஸம்ப்ரதாயத்துக்கு முதல் கூடஸ்தர் நாதமுனி, 2வது கூடஸ்தர் பாஷ்யகாரர், 3வது கூடஸ்தர் தேசிகன், 4வது திருக்குடந்தை தேசிகன் - இப்படி நான்கு கூடஸ்தர்களுடன் வளர்ந்துவந்த சுத்த உபயவேதாந்த ஸம்ப்ரதாயம் ஸ்ரீ திருக்குடந்தை தேசிகனுக்கே சொந்தமாயிற்று. அவரும் ஆந்ஹிகம், ஜயந்தீ பாரணாதி பரிஷ்காரங்களையும் இந்த ஸம்ப்ரதாயத்துக்குச் செய்தருளினார். இவரால் இந்த ஸம்ப்ரதாயம் முநித்ரய சம்ப்ரதாயம் என்று ப்ரசித்தி யடைந்தது. திருக்குடந்தைதேசிகனின் சிஷ்ய பரம்பரைகள் பல உண்டானாலும் முநித்ரயசித்தாந்தம் என்று ஒவ்வொரு நாளும் திருநாம அனுசந்தானம் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்துக்கே அஸாதாரணமாய் விளங்கி வருகிறது. திருக்குடந்தை தேசிகனுக்குப் பின் வழுத்தூர் ஸ்வாமி ஸ்ரீரங்கம் ஸ்வாமி எனப்படும் வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி ஒருவரால்தான்

ப்ரபலமாக இந்த ஸம்ப்ரதாயம் நிர்வஹிக்கப்பட்டு வந்தது. அதிலும் அந்த ஸ்வாமியிடம் ஆச்ரயித்த அண்ணையார்ய ஸ்வாமி, வங்கீபுரம் ஸ்வாமி என்கிற ஆண்டிகாட்டு ஸ்வாமி, இவருடைய ஶிஷ்யரான கேதாண்டிப்பட்டி ஸ்வாமி ஸம்ப்ரதாயங்களிலும் முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகம் என்ற அனுசந்தானம் விடப்பட்டு, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகம் என்று வழங்கப்பட்டு வருகிறது. ஸ்ரீ ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் மட்டும் ஸ்ரீமந் நாதமுனி, ஸ்ரீமத் யாமுனமுனி, ஸ்ரீமத் ராமாநுஜ முனி, முனிரூப முனித்ரயஸித்தாந்த ஸ்தாபநம் என்று ப்ரதிதினம் நாளது வரையில் வழங்கி வருகிறது.

ஆண்டவன் ஸம்ப்ரதாயம் எனப் பெயர் வரக் காரணம் என்ன? எனில்,

ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகனின் திவ்ய நியமனப்படி ஸ்ரீ வழுத்தூர் ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் அநேகம் ஶிஷ்யர்களை உஜ்ஜீவிப்பித்துக் கொண்டு இருந்த காலத்தில் த்ரமிட தேசத்தில் எங்கிருந்தும் அநேகம் ஶிஷ்யர்களால் ஆச்ரயிக்கப்பட்டு மிக ப்ரசித்தியை அடைந்திருந்தார். பின்னர் இந்த வழுத்தூர் ஸ்வாமி நிலையாக ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து ஆசார்யகம் செய்து வந்தார். ஆதலால் இவருக்கு ஸ்ரீரங்கம் ஸ்வாமி என்ற பெயரே நெடுங்காலம் இருந்து வந்தது. ஸ்ரீரங்கம் ஸ்வாமி என்றுதான் இவரை எல்லாரும் சொல்லிவந்தனர். இப்படி மஹாகீர்த்தியோடு எழுந்தருளியிருந்த காலத்தில் இந்த ஸ்ரீரங்கம் ஸ்வாமி தம் ஆசார்யரை தண்டம் ஸமர்ப்பிக்க திருக்குடந்தைக்கு எழுந்தருளியாயிற்று.

அப்போது திருக்குடந்தை தேசிகன் ஆச்ரமத்தில் பெரிய காலக்ஷேப கோஷ்டி நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீரங்கம் ஸ்வாமி எனும் நம் வழுத்தூர் ஸ்வாமி தம் ஆசார்யரின் திருவடியில் வேரற்ற மரம்போல் விழுந்து தமக்கு ஆசார்யர் செய்திருக்கும் கைம்மாறு செய்ய இயலாத மஹத்தான உபகாரங்களை அனுசந்தித்து நம்மாழ்வார் ஆராவமுதாழ்வான் விஷயமாக அருளியுள்ள வாரா வருவாய் பாசுரத்தையே திருக்குடந்தை தேசிகன் விஷயமாகவே பொருத்தி அனுசந்தானம் செய்து புளகாங்கிதராய் கண்களில் நீராய் பெருக்கியாயிற்று. அதிலும்

**வாரா வருவாய் வருமென் மாயா! மாயா மூர்த்தியாய்!**
**ஆராவமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்! தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்! திருக்குடந்தை ஊரா!**
**உனக்காட்பட்டும் அடியேன் இன்னும் உழல்வேனோ?**

என்கிற பாசுரத்தில் - தீராவினைகள் தீர என்னை ஆண்டாய் ! திருக்குடந்தை ஊரா!, என்ற ஸ்ரீஸூக்தியை மிகவும் கதறி மீண்டும் மீண்டும் அதையே அனுசந்தித்தார். அப்போது திருக்குடந்தை தேசிகன் "நீரே எம்மை ஆண்டவன் நீரே எம்மை ஆண்டவன் ! " என்று தம் சிஷ்யரான வழுத்தூர் ஸ்வாமியை உள்ளம் குளிர்ந்து ச்லாகித்தாயிற்று. எதற்காக எனில் தேசிகன் சம்ப்ரதாயம் கலங்கிப் போகாமல் யதாபூர்வம் விளங்கும்படியாக, அநேகம் அநேகம் திருநாமங்கள் ஆச்ரயிக்கும்படியாக, சிஷ்யார்ஜனம் செய்து தம் திருவுள்ளத்தையும், தேசிகன் திருவுள்ளத்தையும், ஆராவமுதாழ்வான் திருவுள்ளத்தையும் நிறைவேற்றி வைத்ததற்காக அப்படி சாதித்தாயிற்று.

பின்னர் வழக்கம்போல் ஸ்ரீரங்கத்தில் பெரிய பெருமாள் மங்களாஸாஸனத்திற்காக வழுத்தூர் ஸ்வாமி எழுந்தருளினபோது ஒருநாள் பெருமாள் அர்ச்சகமுகேந த்வஜஸ்தம்பம் வரையிலும் மாலை ஸ்ரீசடாரி சேஷவஸ்த்ர மர்யாதைகளை அனுப்பி எதிர்கொண்டு அர்ச்சகமுகேந அருளிப்பாடிட்டு " எம் ஆண்டவனே வாரும்" என்று அழைத்தருளியாயிற்று.

இந்நிகழ்ச்சி கூட இருந்த சிஷ்யர்களுக்கு மிக்க வியப்பாக இருந்தது. இவரின் ஆசார்யர் அளித்த அதே திருநாமத்தையே பெரியபெருமாளும் இவருக்கு சாத்தினதைக் கண்டு இது பெரியபெருமாள் ஸ்ரீ பாஷ்யகாரரை உடையவர் என்று சாற்றினாற் போலவும், ஸ்ரீதேசிகனுக்கு வேதாந்தாசார்யர் என்று சாற்றினாற்போலவும், இப்போது நம் ஸ்ரீரங்கம் ஸ்வாமிக்கு ஆண்டவன் என்று திருநாமம் சாற்றியுள்ளபடி என்று விஸ்மயித்தனர். ஆண்டாள், ஆளவந்தார், ஆண்டான் முதலிய திருநாமங்கள் முன்பே நம் ஸம்ப்ரதாயத்தில் பழகி வந்ததுபோல் இதுவும் அத்புதமான திருநாமம் என ஆனந்தப் பட்டனர்.

இவரை அந்த சமயத்தில் சதா அநுவர்த்தித்துக் கொண்டிருந்த இவரின் அத்யந்த அபிமான சிஷ்யரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜர் என்னும் யதி ( பிற்காலத்தில் இவரே திருத்துறைப் பூண்டி ஆண்டவன் எனப்படுகிறார்) தம் ஆசார்யரான ஸ்ரீரங்கம் ஸ்வாமியை இந்நிகழ்ச்சிக்குப் பின் "ஆண்டவன்" என்றே வ்யவஹரித்து வந்தார். ஆண்டவன் என்ற திருநாமம் அவ்வளவாக மற்றவர்களால் ப்ரசித்தி அடையவில்லை. ஸ்ரீரங்கத்தில் சிலர் மாத்திரம் இந்த நிகழ்ச்சி

அறிந்து வ்யவஹரித்தனர். மற்ற அநேகம் சிஷ்யர்கள் தமிழ்நாடெங்கும் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகனை ஸ்ரீரங்கம் ஸ்வாமி என்று ஏற்கனவே நாடறிந்த திருநாமத்தாலேயே சொல்லி வந்தனர்.

(வழுத்தூர் ஆண்டவன் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் எனும்) நம் ஸ்ரீரங்கம் ஸ்வாமியை ஆச்ரயித்து காலக்ஷேபம் செய்ய காஞ்சீபுரத்திலிருந்து வந்த பகல்தீவட்டி ஸ்ரீநிவாஸ ராகவாசார்யருக்கு (பின்னாளில் இவரே பெரியாண்டவன்) தம்மால் காலக்ஷேபம் சாதிக்க திருமேனி முடியவில்லை என்று சொல்லி ஸ்ரீரங்கம் ஸ்வாமி தம் சிஷ்யரான ஸ்ரீநிவாஸராமனுஜமஹாதேசிகனிடம்(பின்னால் இவர்தான் திருத்துறைப்பூண்டி ஆண்டவன்) நியமித்தார். திருத்துறைப்பூண்டி ஆண்டவன் பயந்தார். ஆசார்யரைப் போல் தம்மால் சாதிக்க முடியாதே என்றார். நாமே உமக்குள் ஒரு அம்சமாக அநுப்ரவேரித்து காலக்ஷேபம் சாதிப்போம், பயப்படவேண்டாம், என வேதாந்த ராமானுஜ ஸ்வாமி அனுக்ரஹித்தார். இவ்விஷயம் திருத்துறைப்பூண்டி ஆண்டவனின் தனியனிலேயே குறிக்கப் பெற்றுள்ளது. திருத்துறைப்பூண்டி ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன் தம் ஆசார்யரான ஸ்ரீரங்கம் ஸ்வாமியை ஆண்டவன் என்றே வ்யவஹரித்து தம் காலக்ஷேபங்களில் எப்போதும் சிஷ்யர்களுக்கு சாதித்தாயிற்று. "ஆண்டவன்" என்பது முதலில் திருக்குடந்தை தேசிகனும் பின்னால் பெரிய பெருமாளும் சாற்றின அசாதாரண திருநாமமாயிற்றே.

ஸ்ரீரங்கம் ஸ்வாமியான வழுத்தூர் ஆண்டவன் ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் திருநாடலங்கரித்த பிறகு

அவருடைய ஸ்தானத்தில் திருத்துறைப்பூண்டி ஸ்வாமியையே சிஷ்யர்கள் மாத்ரம் ஆண்டவன் என்றே சொல்லலாயினர். மற்றவர்கள் ஸ்ரீநிவாஸராமானுஜ ஸ்வாமி என்றுதான் சொல்லி வந்தனர். ஸ்ரீரங்கம் ஸ்வாமியின் அம்சமான ஆசார்யர் என்று வழுத்தூர் ஆண்டவனே அனுக்ரஹித்திருந்தபடியால் சில காலம் சென்றவாறே திருத்துறைப்பூண்டி ஸ்வாமிக்கு மட்டுமே அடுத்ததாக ஆண்டவன் என்ற திருநாமம் மெல்ல ப்ரசித்தி அடைய ஆரம்பித்தது. ஸ்ரீரங்கம் ஸ்வாமியின் மற்ற இரு முக்ய சிஷ்யர்களான ஆண்டிக்காட்டு வேதாந்தராமனுஜ மஹாதேசிக ஸ்வாமிக்கோ மற்றும் நாவல்பாக்கம் அண்ணயார்ய மஹாதேசிகனுக்கோ இந்த திருநாமம் ஏற்படவில்லை. இன்னும் மற்ற சிஷ்யர்களுக்கும் ஏற்படவில்லை. இதனால்தான் திருத்துறைப்பூண்டி மஹாப்ரபாவர் ஆண்டவனுக்குப் பின் ஸ்ரீநிவாஸமஹாதேசிகனுக்கு (நம் பெரியாண்டவனுக்கு) மட்டுமே முதலில் ஆண்டவன் என்று மஹாப்ரசித்தி அடைய ஆரம்பித்தது. அப்போது திருத்துறைப் பூண்டி ஆண்டவன் பெரியவரானதால் திருத்துறைப்பூண்டி ஸ்வாமியையே பெரியாண்டவன் என்று சிலகாலம் சொல்லி வந்தனர். ஸ்ரீநிவாஸமஹாதேசிகனை "ஆண்டவன்" என்று சொல்லி வந்தனர். பின்னாளில் சின்னாண்டவன் ஆச்ரம ஸ்வீகாரம் ஆனபின் திருத்துறைப்பூண்டி ஆண்டவனை உலகம் பெரியாண்டவன் என்று சொல்வது நின்றுவிட்டது. ஸ்ரீநிவாஸமஹாதேசிகனையே பெரியாண்டவன் என்ற திருநாமத்தால் சொல்லிவர அதுவே ப்ரசித்தியாகி நிலைத்து விட்டது.

இப்படி ஸ்ரீரங்கம்( வழுத்தூர் வேதாந்த ராமானுஜ மஹாதேசிக) ஸ்வாமிக்கு முதலில் ஆண்டவன் என்ற திருநாமம் ஏற்பட்டு பின்னர் திருத்துறைப்பூண்டி ஆண்டவன், பெரியாண்டவன், சின்னாண்டவன் என்று இந்த ஆசார்ய பரம்பரைக்கு மட்டுமே ஆண்டவன் பரம்பரை என்ற திருநாமம் ஏற்பட்டு ஆண்டவன் சம்ப்ரதாயம் என்றும் பாரெல்லாம் பரவப் பெற்றது. கர்நாடக தேசம் வரையிலும் பெரியாண்டவன் ஸஞ்சாரம் செய்து சம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தார். இவரை எல்லாருமே ஆண்டவன் என்று மட்டுமே வ்யவஹரிக்கலாயினர். இவருக்கு அடுத்ததாக சின்னாண்டவனே ஆண்டவன். அதற்கு அடுத்ததாக சின்னாண்டவனின் சிஷ்யபரம்பரையில் ஸ்தானத்திற்கு வந்த ஆசார்யர்களே ஆண்டவன். தவிர, வேறு எந்த பரம்பரையையும் சமீப காலம் வரையிலும்கூட ஆண்டவன் என்று யாரும் ஸ்மரிக்க வில்லை. ஏராளமான தம் சிஷ்யர்களில் சின்னாண்டவனை மட்டுமே ஆண்டவன் என்று பெரியாண்டவனே அங்கீகரித்ததால் உலகம் இந்த ஸ்ரீபாதுகாஸேவக ராமானுஜ மஹாதேசிகனையே சின்னாண்டவன் (பெரியாண்டவனுடன் கூடவே இருந்ததால் சின்னாண்டவன்) என வழங்கி வந்தது. பின்னாளிலும் சின்னாண்டவன் பரம்பரையில் ஆசார்யர்களுக்கு மட்டுமே ஆண்டவன் என்ற திருநாமம் வழங்கி வந்துள்ளது. இப்படித்தான் ஈரரசு படாதிருந்தது ஆண்டவன் என்ற திருநாமம்.

வழுத்தூர் ஆண்டவனின் திவ்யப்ரபாவத்தை ஸ்ரீமத் பாஷ்யகாரருடையது போல் என்று அனுசந்திப்பர். இவர் வழுத்தூர் ஜகத்ரக்ஷகப் பெருமாளுடன் ஏகாந்தத்தில் ஸஹஜ ஸம்பாஷணம் செய்திருப்பர் என்றும் சொல்வர்.

ஸ்ரீரங்கத்தில் ஒரு காலக்ஷேப ஆரம்ப தினத்தில் கோஷ்டியில் ஒரு ஸர்ப்பம் வந்து அந்வயித்ததாகவும், எல்லாரும் மிரண்டு போக, ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன் ஒன்றும் செய்யாதீர்கள் என்று தடுக்க, அன்று முதல் தினமும் அது காலக்ஷேபத்தில் அந்வயித்ததைக் கண்டு, ஏதோ ஜன்மாந்தர மஹானுபாவன் இது என்றாராம். ஸ்வாமி ஒருநாள் அனுஷ்டானம் முடித்துக் கொண்டு காவேரிக் கரையில் எழுந்தருளும்போது குறுக்கே திருவடிக்கு முன் வந்து படுத்த அந்த ஸர்ப்பம் போகச் சொன்னாலும் போகாதிருக்கவே, அது ஆர்த்தி மிகுதியால் ஶரணாகதியைப் ப்ரார்த்திப்பதாக அறிந்து அப்போதே ஆர்த்த ப்ரபத்தி செய்வித்தாராம் ஆசார்யர். உடனே அதற்கு ஜன்ம ஸாபல்யம் ஆகி முக்தியடைந்ததாம் அது. தம் சிஷ்யர்களில் ஸந்தான பாக்யம் இல்லாமல் இருந்த ஒருவரை அழைத்து அந்த ஸர்ப்ப ஸரீரத்திற்கு ஸம்ஸ்காரம் செய்விக்கச் சொன்னாராம். அவரும் அப்படியே செய்ய, புத்ரபாக்யம் அவருக்கு ஏற்பட்டதாம். இப்படியாக அநேகம் ஆச்சர்ய சரித்ரம் வழுத்தூர் ஆண்டவனைப் பற்றி அக்காலத்தில் பேசுவர் என்பர்.